பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 23 ஞாயிற்றுக்கிழமை 06.02.2022 கதிர் 319

## கொழும்பில் இளைஞன் கொடூரப் படுகொலை

கொழும்பின் புறநகர் பகுதியான தெஹிவளையில் 18 வயதான இளைஞன் ஒருவன் இன்று அதிகாலை கத்தியால் குத்தப்பட்டுக் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளான்.

படுகாயங்களுடன் களுபோவில வைத்தியசாலையில் 2

# கடன் பொறியில் இலங்கை கொரோனா காரணம் அல்ல



### உண்மையை அம்பலப்படுத்துகின்றார் கம்மன்பில

கொழும்பு,பெப்ரவரி06

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கும் கொரோனா பரவலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும், அரசாங்கத்தில் இருப்பவர்கள் கூறுவது முற்றிலும் பொய் என்றும்எரிசக்திஅமைச்சர்உதயகம்மன்பிலதெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 2

## 2,438 நிலையங்களில் நாளை உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பம்

### தொற்றாளர்களுக்காக 29 விசேட நிலையங்கள்

(காரைதீவு நிருபர் சகா)


கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடை பெறவிருந்து கொரோனாத் தொற்றுக் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுவந்த 2021ஆம் ஆண்டுக்கான கல்விப்பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. நாளை 7 ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 5 ஆம் திகதி வரை நாடளாவியரீதியில் 2,438 பரீட்சை

மத்திய நிலையங்களில் இது இடம் பெறவுள்ளது. 2



## ஓட்டோவைப் பந்தாடிய வாகனம் சிறுவன் மரணம்; மூவர் படுகாயம்

### தலைமன்னாரில் சம்பவம்



தலைமன்னார் பிரதான வீதியில் ஓட்டோவுடன் கனரக வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதில் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான். 2

## வெள்ளவத்தையில் நேற்று ஒதுங்கிய இரு சடலங்கள்

### ஒருவர் மாலைதீவுப் பிரஜையாம்

வெள்ளவத்தைக் கடற்கரையில் நேற்று ஒதுங்கிய இரண்டு ஆண்களின் உடலங்களில் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

அவர், 24 வயதான மாலைத்தீவை சேர்ந்தவர் என்பது அடையாளப்படுத் தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இரண்டு உடலங்களும் வெள்ளவத்தையின் கரையில் இருந்து 300 மீற்றருக்கு அப்பால் 2

## இந்திய மீனவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகள் நாளை முதல் பகிரங்க ஏலத்தில்!

### காரைநகரில் தொடங்குகிறது; ஆயத்தங்கள் பூர்த்தி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.06

இலங்கைக் கடல் பிரதேசத்துக்குள் அத்துமீறியமைக்காகப் பறிமுதல் செய்யப்பட்டு, இலங்கை அரசுடைமையாக்கப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகளில், யாழ்ப்பாணம், காரைநகரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகள் நாளை ஏலத்தில் விற்பனை செய்யப்படவிருக்கின்றன. 2

## மசகு எண்ணெயின் விலை உலக சந்தையில் உயர்வு!

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை தற்போது சடுதியாக அதிகரித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒரு மாதமாக உலக சந்தையில் தொடர்ந்து அதிகரித்து வரும் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்று 94 டொலரை நெருங்கி வருகிறது. 2

## விபத்தில் தந்தை, மகள் சாவு!

கம்பஹா, அஸ்கிரிய வல்பொல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் தந்தையும் மகளும் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் பௌசர் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின எனப் பொலிஸார் தெரிவித்தனர். 2

## அடுக்குமாடியிலிருந்து விழுந்தவர் மரணம்

பொரளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சஹஸ்புர அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து நேற்று மாலை தவறி வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குடியிருப்பிலிருந்து தவறி வீழ்ந்த நபர் காயங்களுக்குள்ளான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொரளை 2



## 2,438 நிலையங்களில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2021க்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள கொரோனா தொற்றுடைய பரீட்சார்த்திகளுக்காக வைத்தியசாலைகளில் 29 விசேட பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.டி.தர்மசேன தெரிவித்துள்ளார்.

பாடசாலை மற்றும் தனிப்பட்ட ரீதியில் 3 இலட்சத்து 45 ஆயிரத்து 242 பேர் இம்முறை பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

மேலும், 316 இணைப்பு மத்திய நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமையுடன் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள மாணவர்களுக்காக இரண்டு விசேட அறைகள் வீதம் ஒவ்வொரு பரீட்சை மத்திய நிலையத்திலும் அமைக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர்நாயகம்எம்.டி.தர்மசேன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக 29 மருத்துவமனைகளில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தகைய மருத்துவமனைகளின் பட்டியல் திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், தனிமைப்படுத்தலில் இருக்கும் பரீட்சார்த்திகள் தங்களுடைய அனுமதிஅட்டையில்குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திற்குச் சென்று தனிமைப்படுத்தலில் இருப்பதை சம்பந்தப்பட்ட கண்காணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

பின்னர் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்களின்படிமையத்தில்அமைக்கப்பட்டுள்ள விசேட தேர்வு மையத்தில் பரீட்சை எழுத வாய்ப்பளிக்கப்படும்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட அல்லது தற்போது தனிமைப்படுத்தலில் உள்ள விண்ணப்பதாரர்கள் மேலதிக தகவல்களை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து அல்லது 1911 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை மையங்கள் எதுவாக இருந்தாலும் பரீட்சை விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் ஒரே மாதிரியாக நடைமுறைப்படுத்தப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகமான எல்.எம்.டி. தர்மசேன வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில், பரீட்சை நிலையங்களுக்கான தொற்றுநீக்கும் புகை விசிறும் நிகழ்வு பல பாகங்களிலும் இடம்பெற்றன

## கடன் பொறியில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போதுபேசிய அவர், வரலாற்றில் முன்னெப்போதுமே எதிர்நோக்காத நெருக்கடியைநாடுஎதிர்நோக்கியுள்ளது. பலர் இந்த நெருக்கடியை அடையாளம் காணவில்லை. நெருக்கடியை அடையாளம் காணாது அதற்குத் தீர்வு காண முடியாது. இது, கொரோனா காரணமாக ஏற்பட்ட நெருக்கடி எனப் பலர் கூறுகின் றனர். இது உலக நெருக்கடி என்கின்ற னர். இது பொய். இலங்கை வரையறைகள் இன்றி கடனை பெற்றதே இந்த நெருக்கடிக்கு காரணம். இது, கடன் பொருளாதாரம். நாம் வரலாறு முழுவ தும் கடனை பெற்று செலவிட்ட இனம். உழைத்து செலவிடுவதற்கு பதிலாக கடனை பெற்றுச் செலவிடும் கலாசா ரத்தை நாம் 1950 ஆம் ஆண்டில் இருந்து முன்னெடுத்து வருகின்றோம்.

தற்போது மேலதிக கடனை பெற முடியாத அளவுக்கு கடன் பொறியில் சிக்கியுள்ளோம். இந்த நெருக்கடி முழு நாட்டு மக்களும் சிக்கியுள்ளனர். இதனால், அதிகமாகப் பயிரிடுங்கள். உருவாக்கங்களுக்கான உந்துலை ஏற்படுத்த வேண்டும். இந்த முன்னுதாரணத்தை பேச்சில் அல்ல, அரசியல் தலைவர்கள்செயலில்காட்டவேண்டும்.

பெருந்தொகையான எரிபொருளை விரயமாக்கி சுதந்திர தின வைபவம் போன்ற அரச நிகழ்வுகளை நடத்துவது தவறு. அப்படியானவைபவங்களைநடத்த வேண்டாம் என நான் அமைச்சரவையில் கோரினேன். எனினும் அதனைஜ் கவனத்தில் கொள்ளவில்லை – என்றார்

## ஓட்டோவைப் பந்தாடிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் கொண்னையன் குடியிருப்பைச் சேர்ந்த குடும்பம் ஒன்று இன்று ஓட்டோவில் ஓலைத்தொடுவாய் வீதிக்கூடாக திரும்பிய போது பின்புறமாக தலைமன்னார் பகுதியிலிருந்து மன்னார் நோக்கி வேகமாக வந்த மீன் ஏற்றும் கனரக வாகனம் மோதியதில் ஓட்டோவுடன்அதில்பயணித்தவர்களும் தூக்கி வீசப்பட்டனர்.

ஓட்டோ பலத்த சேதத்திற்கு உள்ளாகி, வீதிக்கு அருகாமையில் வெள்ள நீருக்குள் வீசி எறியப்பட்ட நிலையில் காணப்பட்டது.

பலத்த காயங்களுக்கு உள்ளான தாய் சந்தியோகு செல்வி (வயது- 30), மகன்களான கெபின் கரன் (வயது -6), கானோர் ( வயது- 1) ஆகியோருடன் ஓட்டோ சாரதியும் பலத்த காயங்களுடன் பேசாலை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் தீவிர சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த நிலையில் மகன் கெபின்கரன் (வயது -6) மன்னார் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்தான்.

ஏனைய மூவரும் தொடர்ந்து தீவிர சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். கனரக வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

## இந்திய மீனவரி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்காக கொழும்பில் இருந்து அதிகாரிகள் குழு யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இலங்கையின. வடக்கில் ஐந்து துறைமுகப் பகுதிகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களிற்குச் சொந்தமான ட்ரோலர் விசைப் படகுகள் உட்பட 105 கடற்கலங்கள் நாளை முதல் 5 தினங்களிற்கு ஏலத்தல் விற்பனை செய்யப்படவுள்ளன. இவ்வாறு விற்பனை செய்யப்படவுள்ள படகுகளை கடந்த ஒருவாரமாக அதிகமனோர் பார்வையிட்டனர்.

இவ்வாறு பார்வையிட்ட படகுகளில் காரைநகரில் சுமார் 100 அடி நீள படகு ஒன்றே அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. இந்தப் படகு சுற்றுலாத் துறை ஊக்குவிப்பிற்கு பயன்படுத்தப்படக்கூடியது எனக் கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சுற்றுலாத்துறையில் முதலீடு செய்ய விரும்புபவர்கள் இப்படகு தொடர்பில் அதிக கரிசனை காண்பிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கொழும்பில் இளை........

சேர்க்கப்பட்ட நிலையில் அந்த இளைஞன் உயிரிழந்துள்ளான் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முரண்பாடு காரணமாகவே அவர் கொலை செய்யப்பட்டார் என ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. கொலையாளி பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அடுக்கு மாடியிலிரு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் பொரளைப் பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம்பிரேதபரிசோதனைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளைப் மேற்கொண்டு வருகின்றனர்.

## மசகு எண்ணெய் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, உலக சந்தையில் மசகு எண்ணெய் விலையானது கடந்த 2014 செப்டெம்பர் மாதம் முதல் அதாவது கடந்த 7 வருடங்களில் 100 டொலரைத் தாண்டியிருக்கவில்லை.

இந்நிலையில், தற்போது ஏற்பட்டு வரும் இந்த சடுதியான விலை அதிகரிப்பைப் பார்க்கையில், எதிர்வரும் சில மாதங்களில் மசகு எணணெய் விலை 100 டொலரைத் தாண்டிவிடும் என சந்தை ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

அதேவேளை, பெற்றோல் மற்றும் டீசல் என்பனவற்றை சந்தைக்கு விடுவிக்கும்போது, தொடர்ந்தும் நட்டத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக, இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

டீசல் லீட்டர் ஒன்றிற்கு 36 ரூபாவினாலும், பெற்றோல் ஒரு லீட்டருக்கு 8 ரூபாவினாலும் நட்டம் ஏற்படுவதாக அதன் தலைவரான சட்டத்தரணி சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் தந்தை........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர்கள் 6 வயது சிறுமி மற்றும் 42 வயதுடைய தந்தை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் கம்பஹா உக்கல்பொட பிரதேசத்தில் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் பௌசர் வாகன சாரதியின் கவனக் குறைவால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## வெள்ளவத்தையில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து மீட்கப்பட்டன. இந்த நிலையில் அடையாளம் காணப்பட்ட மாலைத்தீவு பொதுமகனின் உடலத்தில் காயங்கள் காணப்படுகின்றன எனப் பொலிஸின் சிரேஷ்டபேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வசித்து வந்த ஆஸிம் நசீர் என்ற இந்த மாலைத்தீவு மாணவரைக்காணவில்லைஎன்றுஏற்கனவே மாலைத்தீவின் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

இந்தநிலையில் அவரை கடைசியாக கடந்த 4ஆம் திகதியன்று கறுப்பு நிற ரீசேர்ட் அணிந்தநிலையில் தாங்கள் கண்டனர் என்று உறவினர்கள் தெரித்தனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.







விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்நிலைக்கு யார் காரணம்?

ஆளும் தரப்பில் ஒருவராவது யதார்த்தத்தை புரிந்து கொண்டிருக்கிறார் – அதை வெளிப்படையாகப் பேசுகின்றார் – என்பது நல்ல விடயம்தான்.

'பிவித்துரு ஹெல உறுமய'வின் தலைவரும், எரிசக்தி அமைச்சருமான உதய கம்மன்பில உண்மையைப் பேச முன்வந்திருக்கிறார்.

இந்த உண்மையை உரைப்பதன் மூலம் இப்போது ஆட்சி பீடத்தில் இருக்கும் அரசின் தலைமை – அவரது அரசின் தலைமை – முட்டாள்தனமாகச் செயற்படுகின்றது என்பதை கூறாமல் கூறி, ஒப்புக் கொள்கின்றார் அவர்.

"இப்போதைய நெருக்கடி கொரோனாப் பரவல் காரணமாக ஏற்பட்டது, இது உலக நெருக்கடி என்று பலர் கூறுகின்றனர்." – என்கிறார் அவர். விடயம் விளங்காமல் – தெரியாமல் – புரியாமல் பலர் அப்படி பேசுகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் இங்கு அப்படிக் கூறுபவர்கள் எல்லாம் பெரும்பாலும் அவரது அரசு தரப்பு சகாக்கள் மட்டுமே என்பதை அவர் மறந்து விடக் கூடாது.

"இலங்கை வரையறைகள் இன்றி கடனைப் பெற்றதே இந்த நெருக்கடிக்குக் காரணம். இது, கடன் பொருளாதாரத்தின் விளைவு. நாம் வரலாறு முழுவதும் கடனைப் பெற்றுச் செலவிட்ட இனம். உழைத்துச் செலவிடுவதற்குப் பதிலாகக் கடனைப் பெற்று செலவிடும் கலாசாரத்தை நாம் 1950 ஆம் ஆண்டில் இருந்து முன்னெடுத்து வருகின்றோம். தற்போது மேலதிக கடனைப் பெற முடியாத அளவுக்கு கடன் பொறியில் சிக்கியுள்ளோம்." – என்று அவர் கூறியிருக்கின்றார்.

மாறி மாறி வந்த அரசுகள், பின்னாளில் கழுத்தை இறுக்கும் இத்தகைய நெருக்கடி ஒன்று நமக்கு வரும் என்பதை நன்றாக தெரிந்து கொண்டே, போட்டி போட்டுக் கொண்டு கடன் வாங்கித் திருவிழாக்களை நடத்தி கொண்டன. அதன் விளைவு கழுத்தை இப்போது வந்து நெரித்துள்ளது.

அதிலிருந்து மீள்வதற்கு ஒரு வழியை கம்மன்பில கூறுகின்றார். "இதனால், அதிகமாக பயிரிடுங்கள். உற்பத்திகளுக்கான உந்துலை ஏற்படுத்த வேண்டும். இந்த முன்னுதாரணத்தைப் பேச்சில் அல்ல, அரசியல் தலைவர்கள் செயலில் காட்ட வேண்டும்." – என்கிறார் அவர்

நல்லது. இந்தச் சிந்தனை – இந்த விளக்கம் – அவரது அரசுத் தலைமைக்கு இல்லாமல் போனது தான் இந்த நெருக்கடி இவ்வளவு விரைவாக நமது நாட்டுக்கு வந்ததற்கு காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

கடன் பொறியில் சிக்கியுள்ள நாட்டை மீட்பதற்காக உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்குரிய வழிவகைகளை முனைப்புடன் நாடுவதை விடுத்து, முழு விவசாயத்துறையையுமே முடக்கும் 'சேதன பசுமை புரட்சி' என்ற பொருத்தமற்ற திட்டத்தை, பொருத்தமற்ற சமயத்தில், பொருத்தமற்ற முறையில், ஆரம்பித்து, முழு நாட்டையுமே குட்டிச்சுவராக்கி வைத்திருக்கிறார் இந்த நாட்டின் தலைவர்.

இந்நிலையில், உண்மையை ஒப்புக் கொள்ளும் துணிச்சல் அமைச்சர் கம்மன்பிலவுக்கு வந்தமைக்கு அவரைப் பாராட்ட வேண்டும். ஆனால் இந்த இழி நிலைமை இவ்வளவு விரைவாக வந்தமைக்கு தனது அரசின் தலைவரே காரணம் என்ற உண்மையையும் அவர் வெளிப்படையாகப் பேசி இருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்.

# தமிழருக்கான பரிகார நீதியில் நாட்டின் அமைதி தங்கியுள்ளது!

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிவிப்பு

சிறிலங்கா தனது சுதந்திரநாளை கொண்டாடிக் கொண்டிருக்கும் நாளில், இலங்கைத்தீவின் முழு அமைதி என்பது தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இனப் படுகொலைக்கான பரிகார நீதியில் தங்கியுள்ளது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

இரத்தக்கறை படிந்த சிறிலங்காவின் சுதந்திரநாளை, கரிநாளாகத் தமிழர்கள் எப்போதும் பார்ப்பது, இலங்கைத்தீவில் இரு தேசங்கள் என்ற நிலைப்பாட்டை உலகிற்கு வெளிப்படுத்தி நிற்கின்றது எனவும் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் சுதந்திரநாள் தொடர்பில் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழர்களது இறைமை பறிக்கப்பட்டு சிங்கள பேரினவாத பூதத்திடம் கையளிக்கப்பட்ட நாளாகவே இந்நாள் இருக்கின்றது. இலங்கைத்தீவு முழுவதுமே சிங்களவர்களுக்கு என்ற நிலைப்பாட்டில் இறுகிப்போயுள்ள பௌத்த பேரினவாதம், அந்நாள் முதல் தமிழர்களை இன அழிப்புக்கு உள்ளாக்கி வருவதோடு, தமிழர் தேசத்தை ஆக்கிரமிப்புச் செய்து, தமிழர் தாயகத்தைக் கபளீகரம் செய்து வருகின்றது.

இத்தகையொரு சூழலில் தமிழர்கள் தமது நீதிக்கும், அரசியல் இறைமைக்கும் போராடி வருகின்றமையோடு, சிறிலங்காவின் சுதந்திரநாளை கரிநாளாகவே கருதுகின்றனர்.

இன அழிப்புக்கான பரிகார நீதியின் அடிப்படையில் தமிழர் தேசத்தின் அரசியல் இறைமை அங்கீகரிக்கப்பட்டு, தமிழர்கள் ஒரு தேசிய இனமாக தமது சுதந்திர தேசத்தை சுவாசிப்பதற்கான நாள் கிட்டாதவரை, இலங்கைத்தீவில் முழுஅமைதி என்பது இல்லை என்பதே சிறிலங்காவின் சுதந்திரநாளில் சிங்கள தேசத்துக்கு, தமிழர் தேசம் விடுக்கின்ற செய்தியாக இருக்கின்றது. - என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

# அடிப்படைவாத பயிற்சி முகாம் நடத்தினராம் தடுப்பிலிருந்த எழு பேர் விளக்கமறியலுக்கு!

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் உதவி ஒத்தாசை புரிந்தனர் எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்பட்டு வந்த ஏழு பேரை , சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் சந்திம லியனகே இதற்கான உத்தரவை கடந்த வியாழக்கிழமை பிறப்பித்தார்.

பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் இந்த 7 சந்தேக நபர்களையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரித்த நிலையில், வியாழக்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சுமார் ஒரு வருட காலத்துக்கும் மேலதிகமாக தடுப்புக் காவலில் இருந்த சந்தேக நபர்கள் இவ்வாறு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

இந்தச் சந்தேக நபர்கள், கடந்த 2018 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 35 மாணவர்களுக்கு மூதூர் மற்றும் ஒலுவில் பகுதிகளில் அடிப்படைவாத பயிற்சி முகாம்களை நடத்தி, உபதேசங்களை முன்னெடுத்துள்ளனர் என விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் நீதிமன்றுக்குத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்கள் குறித்த அடிப்படைவாத உபதேசங்களை நெறிப்படுத்தியுள்ளனர் எனவும், அவர்களது அந்த நடவடிக்கைகளில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் தற்கொலைத் தாக்குதல் நடத்திய சஹ்ரான் ஹசீம் உள்ளிட்ட குண்டுதாரிகள் பலர் வளவாளர்களாகக் கலந்து கொண்டுள்ளமை தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன எனவும் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.

அடிப்படைவாத நடவடிக்கைகள் தொடர்பில் இந்தச் சந்தேக நபர்கள் பிரசாரங்களையும் செய்துள்ளனர் எனவும் விசாரணை அதிகாரிகள் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

இந் நிலையில் இந்த விசாரணைக்கு அமைவான கோவை சட்ட மா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பாக சட்ட மா அதிபரின் ஆலோசனை இதுவரை கிடைக்கப் பெறவில்லை எனவும் விசாரணை அதிகாரிகள் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த மேலதிக நீதிவான் சந்திம லியனகே, சந்தேக நபர்களை சட்ட மா அதிபரின் ஆலோசனை கிடைக்கும் வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

ஒலுவில் பகுதியைச் சேர்ந்த அப்துல் காசிம் மொஹமட், யூசுப் பர்சான், மாவனெல்லையைச் சேர்ந்த கஜன், கமால் மொஹம்மட், சஹாப்தீன் மொஹமட் , மூதுரைச் சேர்ந்த இப்ரஹீம் மொஹம்மத் மற்றும் மொஹம்மட் தாரிக் ஆகியோரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டவர்களாவர்.

# அதிகாரிகள் இடம் மாற்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.06

வடக்கு மாகாணத்தில் இரண்டாம் நிலைச் செயலாளர்கள் மூவர் இரண்டாம் கட்டமாக இடமாற்றப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக பணியாற்றிய திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் தற்போது சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக பணியாற்றிய பிரணவநாதன் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக கல்விப் பணிப்பணிப்ளராகசும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதேநேரம் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக கல்விப் பணிப் பணிப்ளராகப் பணியாற்றிய திருமதி தேவநந்தினி பாபு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# டிப்பர் மோதியதால் தடம்புரண்ட ரயில்!

நேற்று (சனிக்கிழமை) பிற்பகல் ரயில் கடவையில் டிப்பர் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளது. வெலிகந்த, கடவத் மடுவ ரயில் கடவையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ள தாகத் தெரிவிக்கப் படுகிறது. இந்த விபத்தில் டிப்பர் பலத்த சேதமடைந்துள்ளதுடன், அதன் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.





# போர் பதற்றத்துக்கு மத்தியிலும் பெய்ஜிங் சென்று சீன ஜனாதிபதியை நேரில் சந்தித்து புடின் பேச்சு

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்க தயாராகி வருவதாக அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் குற்றம் சாட்டி வரும் நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புடின் நேற்று முன் தினம் சீனாவுக்குச் சென்று அந்நாட்டின் ஜனாதிபதி ஜின்பிங்கை நேரில் சந்தித்துப் பேசினார்.

சீன ஜனாதிபதி ஜின்பிங் கடந்த 2 ஆண்டுகளில் வெளிநாட்டு தலைவர் ஒருவருடன் நேருக்கு நேர் பேச்சு நடத்தியமை இதுவே முதல் முறையாகும். சீனாவில் கொரோனா பரவ தொடங்கியதற்கு பிறகு ஜின்பிங் நாட்டை விட்டு வெளியே செல்ல வில்லை. அதேபோல் எந்த வெளிநாட்டு தலைவரும் சீனா வரவுமில்லை.

ஆனால் தற்போது சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நடக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவில் கலந்து கொள்வதற்காக வெளிநாட்டு தலைவர்கள் பலரும் நேற்று சீனா சென்றனர். அவர்களில் புடினும் ஒருவர்.

ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவுக்கு முன்பாக இருநாட்டு தலைவர்களும் பெய்ஜிங்கில் நேரில் சந்தித்து பேச்சு நடத்தினர். இருநாட்டு உறவுகளை வலுப்படுத்துவது, உக்ரைன் பிரச்சினை, கொரோனோ தொற்று உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து தலைவர்கள் விவாதித்தனர்.

இந்த சந்திப்புக்கு பின் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்த புடின், ரஷ்யாவும் சீனாவும் கண்ணியமான உறவுக்கு எடுத்துக்காட்டு. சீனாவுடனான ரஷ்யாவின் உறவுகள், நட்பு மற்றும் மூலோபாய கூட்டாண்மையின் பாதையில் படிப்படியாக வளர்ந்து வருகின்றன.

ஜின்பிங்கை நான் நீண்ட காலமாக அறிவேன். நாங்கள் இருவரும் உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பல பொதுவான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் நல்ல நண்பர்கள் மற்றும் அரசியல்வாதிகள்.

நாங்கள் எப்போதும் நெருக்கமான தொடர்பை பேணி வருகிறோம் என்று கூறினார்

# மெட்டாவின் பங்குகள் தொடர்ந்தும் வீழ்ச்சி!

## பின் தள்ளப்பட்டார் மார்க்



மெட்டா நிறுவனத்தின் பங்குகள் தொடர்ச்சியாக விலை வீழ்ச்சி அடைந்ததால் அந்நிறுவன தலைமை செயல் அதிகாரி மார்க் ஜுக்கர்பெர்க் உலகப் பணக்காரர்கள் வரிசையில் 13 ஆவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளார்.

பேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பயனர்கள் எண்ணிக்கை குறைந்தமையை அடுத்து அந்நிறுவனத்தின் பங்குகளின் விலை 26 சதவீதம் வீழ்ச்சி அடைந்தது. இதனால் 82.5 பில்லியன் அமெரிக்க டொலர் சொத்து மதிப்புடன் மார்க் ஜுக்கர்பெர்க் 13 ஆவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டார்.

91.1 பில்லியன் டொலர் சொத்து மதிப்புடன் கவுதம் அதானி 10 ஆவது இடத்தைப் பிடித்து ஆசியாவின் முதல் பணக்காரர் ஆனார். முகேஷ் அம்பானி 89.2 பில்லியன் டொலர் சொத்து மதிப்புடன் 11 வது இடத்தில் இருக்கின்றார் எனக் கூறப்படுகிறது



# பிரிட்டிஷ் பிரதமர் பொரிஸ் ஜோன்சனின் 4 மூத்த உதவியாளர்கள் திடீர் விலகல்!

பிரதமர் பொரிஸ் ஜோன்சனின் நான்கு மூத்த உதவியாளர்கள், டவுனிங் ஸ்ட்ரீட்டில் தங்களது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

கொள்கை திட்ட தலைவர் முனிரா மிர்சா தனது பதவியை இராஜினாமா செய்த சிறிது நேரத்திலேயே தகவல் தொடர்பு இயக்குனர் ஜெக் டோய்ல் தனது இராஜினாமாவை உறுதிப்படுத்தினார்.

வியாழக்கிழமை, தலைமைப் பணியாளர் டான் ரோசன்ஃபீல்ட் மற்றும் மூத்த சிவில் ஊழியர் மார்ட்டின் ரெனால்ட்ஸ் ஆகியோரும் தங்களது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர். பிரதமர் ஜோன்சனுக்கு அவரது கட்சிக்குள்ளேயே அவரது தலைமை குறித்து கேள்விகள் அதிகரித்து வருகின்ற நிலையில், இந்த உயர் மட்ட உதவியாளர்களின் இந்த இராஜினாமா அறிவிப்புகள் வெளிவந்துள்ளன.

தகவல் தொடர்பு இயக்குனர் ஜெக் டோய்ல், 'சமீபத்தியவாரங்கள் எனது குடும்பவாழ்க்கையில் பயங்கரமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது' என்று கூறினார்.

10ஆம்எண் அலுவலகசெய்த்தொடர்பாளரின் அறிக்கையில், 'ரோசன்ஃபீல்ட் தனது இராஜினாமாவை வியாழக்கிழமை பிரதமரிடம் தெரிவித்தார், ஆனால் அவரது இடத்திற்கு இன்னொருவரை நியமிக்கும் வரை அவர் தொடர்ந்து பணியில் இருப்பார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் முதன்மை தனிப்பட்ட செயலாளரான ரெனால்ட்ஸ், பின்னர் வெளியுறவு அலுவலகத்தில் ஒரு பணியை தொடருவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

# 4 நாள்கள் ஆழ்துளைக் கிணற்றில் சிக்கியிருந்த சிறுவன் உயிரிழப்பு!

மொராக்கோவில் நான்கு நாள்களாக ஆழ்துளைக் கிணற்றில் சிக்கியிருந்த ஐந்து வயது சிறுவன் உயிரிழந்துள்ளான் எனர் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட நிலையில் சிறுவன் இறந்துவிட்டான் என அந்நாட்டு அரசாங்கத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது.

ரேயன் என்ற சிறுவனை மீட்பதற்கான முயற்சி, இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது நேரிலும் இணையம் வழியாகவும் ஆயிரக்கணக்கானோர் அவனுக்காகப் பிராத்தனை மேற்கொண்டனர்.

சிறுவன் கிணற்றின்ல் 104 அடி ஆழத்தில் வீழ்ந்த நிலையில் நிலச்சரிவு ஏற்படும் என்ற அச்சத்தால் மீட்புப் பணியில் தொய்வு ஏற்பட்டது.

இருப்பினும் இறுதியாக சனிக்கிழமை மாலை சிறுவனை கிணற்றில் இருந்து மீட்டு வெளியே கொண்டு வந்த மீட்புப் பணியாளர்கள் அச்சமயம் சிறுவனின் நிலை குறித்து அறிவிக்கவில்லை.

சமூக வலைதளங்களில், உலகம் முழுவதும் ட்ரெண்டிங்கில் இருந்த றீழிஸளயூழிதீழிஜ என்ற ஹேஷ்டேக்கைப் பயன்படுத்தி மக்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

ஆனால் சில நிமிடங்களில் ரேயான் இறந்து விட்டதாக அறிக்கை வந்தபோது இது மன வேதனையாக மாறியது.

இதன் பின்னர் டுவிட்டர் பயனர்கள் அஞ்சலி செலுத்தவும் சோகத்தை வெளிப்படுத்தவும் அதே ஹேஷ்டேக்கைப் பயன்படுத்தத் தொடங்கினர்.



# உலகின் முதல் மலேரியா தடுப்பூசி கென்யாவில் வழங்கப்படுகின்றது!

கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவில் உலகின் முதல் மலேரியா தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு ஆண்டுக்கு 5 வயது வரையிலான சிறுபிள்ளைகளில் சராசரியாக இரண்டு லட்சத்து 60 ஆயிரம் பேர் மலேரியா நோயால் இறக்கின்றனர்.

இதுவரை ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பிள்ளைகள் மலேரியாவுக்கு எதிரான தடுப்பூசியைப் போட்டுக் கொண்டுள்ளனர்.

அதற்கான முன்னோடித் திட்டம் கென்யா, கானா, மலாவி போன்ற ஆபிரிக்க நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் உலக சுகாதார அமைப்பு அதனை பிள்ளைகளுக்கும் பயன்படுத்த ஒப்புதல் வழங்கியது.

அதன் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்படும் மலேரியா நோயால் கடுமையாகப் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை குறைந்து வருவதாக மருத்துவ ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.



காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# உத்தராகாண்ட் சட்டசபைத் தேர்தலை ஒட்டி வாக்குறுதிகளை வாரி வழங்கும் ராகுல் காந்தி

உத்தர காண்ட் சட்டசபைத் தேர்தலையொட்டி அங்கு சுற்றுப் பயணம் மேற் கொண்ட ராகுல் காந்தி, வாக்காளர்களுக்கு நான்கு முக்கிய வாக்குறுதிகளை வழங்கி யுள்ளார்.

உத்தர காண்ட் மாநிலத்தில் 4 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு, எல்.பி.ஜி. சிலிண்டர்களின்விலையை 500ரூபாவுக்கு குறைவாக நிர்ணயம் செய்தல், 5 லட்சம் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 40,000 ரூபா வருமானம், வீட்டு வாசலுக்கே வந்து மருத்துவ வசதிகள் வழங்குதல் ஆகியன நடைமுறைப்படுத்தப்படும் என்று ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

ராஜஸ்தான், சத்தீஸ்கர் மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் விவசாயிகளுக்கு கடன்களைத் தள்ளுபடி செய்வோம் என நாங்கள் உறுதியளித்தோம், அதை நாங்கள் நிறைவேற்றினோம் என்றும் ராகுல் காந்தி தெரிவித்தார்.

முன்னதாக ஹரித்துவாரில் உள்ள கங்கை ஆற்றின் கரையில் நடைபெற்ற கங்கா ஆரத்தி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ராகுல் காந்தி, விளக்குளை ஏற்றி வழிபாடு செய்தார். இது குறித்த காணொலியை அவர் தனது டுவிட்டரிலும் பதிவிட்டார். மாநிலத்தின் ஒளிமயமான எதிர்காலத் திற்காக பிரார்த்திக்கிறேன் என்று அவர் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.



## பிரபல பாடகி லதா மங்கேஷ்கர் கொரோனாத் தொற்றால் மரணம்



இந்தி திரைப்பட உலகின் மூத்த பாடகி லதா மங்கேஷ்கர் (வயது 92) கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு இன்று காலமானார்.

இந்தி திரைப்பட உலகின் மூத்த பாடகி லதா மங்கேஷ்கர். அவரின் மறைவுக்கு சினிமா பிரபலங்கள், அரசியல் தலைவர்கள் என அனைத்துத் தரப்பினரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

மும்பையில் உள்ள ப்ரீச் கேண்டி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்குத் தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

கடந்த சில தினங்களாக லதா மங் கேஷ்கரின் உடல்நிலை கவலைக் கிடமாகவே இருந்தது. தீவிர சிகிச்சைப் பிரிவில் வென்டிலேட்டர் உதவியுடன்சிகிச்சைஅளிக்கப்பட்டு வந்தது. அவரது உடல்நிலையை மருத்துவ குழுவினர் தொடர்ந்து கண்காணித்து வந்த நிலையில், நேற்று அவரது உடல்நிலை சற்று சீரடைந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இன்று காலையில் லதா மங்கேஷ்கரின் உடல்நிலை மீண்டும் மோசமடைந்தது. அவரது உயிரைக் காப்பாற்ற டாக்டர்கள் தீவிர முயற்சி மேற்கொண்டனர்.

## அமெரிக்காவில் மகாத்மா காந்தி சிலை சேதம் நடவடிக்கைக்கு இந்திய தூதரகம் வலியுறுத்து



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் மன்ஹாட்டனுக்கு அருகிலுள்ள யூனியன் சதுக்கத்தில் 8 அடி உயர மகாத்மா காந்தியின் வெண்கல சிலை வைக்கப்பட்டுள்ளது. இந்த சிலையை அடையாளம் தெரியாத சிலர் சேதப்படுத்தி உள்ளனர். இந்த செயலுக்கு இந்திய தூரகம் சார்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாசகார செயலை தூதரகம் கடுமையாக கண்டிக்கிறது என்று நியூயோர்க் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த இழிவான செயலுக்கு காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

காந்தி சிலை சேதப்படுத்தப்பட்ட சம்பவத்தினை அமெரிக்க வெளியுறவுத்துறை உடனடி விசாரணைக்கு எடுத்து கொண்டுள்ளதாக இந்திய தூரதக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மகாத்மா காந்தியின் 117 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு காந்தி மெமோரியல் சர்வதேச அறக்கட்டளையால் 1986 ஆம் ஆண்டு ஒக்டோபர் 2 ஆம் திகதி, எட்டடி உயரமுள்ள சிலை நன்கொடையாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## ராமானுஜரின் 216 அடி உயரச் சிலை நரேந்திர மோடி திறந்து வைத்தார்

ஸ்ரீராமானுஜரின் 216 அடி உயர சமத்துவத்திற்கான சிலை ஹைதராபாத் முச்சிந்தல் பகுதியில் உள்ள திரிதண்டி ராமானுஜ சின்ன ஜீயர் சுவாமிகளின் ஆசிரம வளாகத்தில், 45 ஏக்கரில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தியப் பிரதமர் மோடி நேற்று மாலை சிலையைத் திறந்து வைத்து அதனை நாட்டுடமையாக்கினார்.

வேத மின்னணு நூலகம், ஆராய்ச்சி மையம், ஸ்ரீ ராமானுஜரின் பல படைப்புகளை விவரிக்கும் கல்விக்கூடம் ஆகியவையும் இந்த வளாகத்தில் இடம்பெற்றுள்ளன. ஸ்ரீ ராமானுஜாச்சார்யா ஆசிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீ சின்ன ஜீயர் சுவாமிகளின் ஏற்பாட்டில், பஞ்சலோகத்தில் இந்தச் சிலை உருவாக்கப்பட்டுள்ளது.

சிலைத் திறப்பு நிகழ்ச்சியின்போது, ராமானுஜரின் வாழ்க்கைப் பயணம் மற்றும் போதனைகள் குறித்த முப்பரிமாண விளக்கக்காட்சியும் காண்பிக்கப் பட்டிருந்தது.

## நீட் தேர்வு ரத்துக்கு அ.தி.மு.க. ஆதரவு ஸ்டாலினுக்கு பன்னீர்செல்வம் உறுதி!



நீட் தேர்வு ரத்துத் தொடர்பாக தமிழக அரசு எடுக்கும் அனைத்து சட்ட நடவடிக்கைகளுக்கும் அ.தி.மு.க. ஆதரவு தரும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தங்களின் 3-2-2022 நாளிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றேன். அதில், மருத்துவக் கல்வியில் சேருவதற்கான நீட் தேர்வில் இருந்து விலக்குப் பெற வழிவகை செய்யும் சட்ட முன்வடிவினை மறுபரிசீலனை செய்யும் பொருட்டு வழங்கப்பட்ட மனுவினை, ஆளுநர் தமிழ்நாட்டு அரசிற்கு திருப்பி அனுப்பியுள்ள நிலையில், இது தொடர்பாக தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் கூட்ட அரங்கில் நடக்கும் சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்று ஆலோசனை வழங்க, அ.தி.மு.க. சார்பில் சட்டமன்ற உறுப்பினரை அனுப்பி வைக்குமாறு தாங்கள் கோரி உள்ளீர்கள்.

'நீட் தேர்வு ரத்து' குறித்த அனைத்திந்திய அ.தி.மு.க. கருத்துகள் ஏற்கெனவே தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலும், 8-1-2022 அன்று நடைபெற்ற சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டன.

அ.தி.மு.க.வை பொறுத்தவரை 'நீட்' தேர்வுரத்து செய்யப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது. எனவே, 'நீட் தேர்வு ரத்து' தொடர்பாக எடுக்கப்படும் அனைத்து சட்டப்படியான நடவடிக்கைக்கும் அ.தி.மு.க. ஆதரிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், என்று அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். நீட் தேர்வு விவகாரம் தொடர்பாக நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அ.தி.மு.க. பங்கேற்காத நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு ஓ.பன்னீர் செல்வம் நீட் தேர்வு விலக்கு தொடர்பாக ஆதரவு தெரிவித்துக்கடிதம்எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளர்ச்சிக் குழுக்களை சேர்ந்த ஐவர் மணிப்பூரில் ஆயுதங்களுடன் கைது!

மணிப்பூரில் சட்டசபைத் தேர்தல் வரும் 27 ஆம் தேதி முதல் மார்ச் 3 ஆம் திகதிவரை இரண்டு கட்டங்களாக நடைபெறவிருக்கிறது. இதையொட்டி அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அசாம் ரைபிள்ஸ் படையினர் மற்றும் இம்பால் மேற்கு பொஸ் கொமாண்டோக்கள் அடங்கிய ஒருங்கிணைந்த குழு நடத்திய தேடுதல் வேட்டையில் மூன்று வெவ்வேறு கிளர்ச்சிக் குழுக்களைச் சேர்ந்த ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்டவர்களில் மூவர் ஐக்கிய தேசிய விடுதலை முன்னணி என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்களிடமிருந்து துப்பாக்கிகள், தோட்டாக்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் போன்றவை பறிமுதல் செய்யப்பட்டன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# கிழக்கில் தொற்றாளர்களுக்கு 4 விசேட பரீட்சை நிலையங்கள்

## நான்கு வைத்தியசாலைகளில் அமைப்பு

(காரைதீவு நிருபர் சகா)

நாளை திங்கட் கிழமை ஆரம்பமாக வுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் கிழக்கு மாகாணத்தில் கொவிட் 19 வைரஸ் தொற்றுக்குள்ளாகிய நிலையில் தனிமைப் படுத்தப் பட்டுள்ள பரீட் சாத்திகளுக்கு விசேட மாக நான்கு பரீட்சை நிலையங்களை அமைத்து பரீட்சை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன என கிழக்கு மாகாண கல்விப்பணிப் பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.



குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட பரீட்சாத்திகளுக்கு பெரிய கல்லாறு மாவட்ட வைத்தியசாலையிலும் ,கல்முனை கல்வி வலய பரீட்சாத்திகளுக்கு அட்டாளைச் சேனை ஆயுர்வேத வைத்திசாலையிலும், அம்பாறை மாவட்ட பரீட்சாத்திகளுக்கு அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையிலும், திருகோணமலை மாவட்ட பரீட்சாத்திகளுக்கு குச்சவெளியிலுள்ள மாவட்ட பொது வைத்தியசாலையிலும் பரீட் சையை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மாணவர்களின் நலன் கருதி பரீட்சை ஆணையாளரின் பணிப்புரைக்கு அமைவாக இவ்வாறு விசேட நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன என கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

# இந்துக்களையும், முஸ்லிம்களையும் பிரிக்கிற சதியின் ஓர் அம்சமே திருகோணமலையில் அரங்கேறுகின்றது!

## எச்சரிக்கிறார் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா எம்.பி.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மூலம் கிறிஸ்தவர்களையும், முஸ்லிம்களையும் பிரித்தஅதேசக்திகள், இன்று இந்துக்களையும், முஸ்லிம்களையும் பிரிக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருக்கின்றன என்று சிந்திக்க நேர்ந்து உள்ளது என்று தேசிய காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ. எல். எம். அதாவுல்லா எம்.பி.தெரிவித்திருக் கின்றார்.



அக்கரைப்பற்று மாநகர சபையின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று மாநகர பிதா அதாவுல்லா அஹமட் க்கியின் தலைமையில் அக்கரைப் பற்று புதிய நீர் பூங்காவில் உள்ள சுதந்திர சதுக்கத்தில் நாட்டின் 74 ஆவது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. சர்வ சமய பிரார்த் தனைகள், சுதந்திர போராட்ட வீரர்களுக்கான நினைவேந்தல், சர்வ இன கலாசார கலை நிகழ்வுகள் ஆகியவற்றோடு இடம்பெற்ற விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசியபோது அதாவுல்லா இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கைதிருநாட்டில் இறைவன் அருளால் அனைத்து வளங்களும் நிறைய பெற்று இருக்கின்றன. இதனால் உலக நாடுகளும், உலகில் உள்ள சண்டியர்களும் எமது நாட்டையும், எம்மையும் அடிமைப்படுத்தி வைத்திருக்க முயல்கின்றனர். எமக்கு 74 வருடங்களுக்கு முன்னர் சுதந்திரம் கிடைத்து விட்டது. ஆனால் எம்மை நிம்மதியாக வாழ விடுகின்றார்கள் இல்லை. நாம் சுதந்திரம் அடைந்த பிற்பாடுகூட இந்த நாட்டின் அரசமைப்பு, பொருளாதார கொள்கை ஆகியவற்றில் வல்லரசுகள் தலையிட்டு கொண்டே உள்ளன.

இன ஒற்றுமை குலைக்கப்படுகிறது. பொருளாதார ரீதியாக தாக்கப்பட்டவர்களாகவும், பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப முடியாதவர்களாகவும் நாம் தொடர்ந்தும் இருந்து வருகின்றோம்.

வல்லரசுகளின் ஆக்கிரமிப்புகள் தற்போது மிக தந்திரமான முறைகளில் நடத்தப்பட்ட வண்ணம் உள்ளன. வெளிநாடுகளின் ஒத்திசைவோடு தான் ஈழ போராட்ட குழுக்கள் செயற்பட்டன. சகோதர படுகொலைகளும் நடந்தன. உரிமையின் பெயரால் இரத்த ஆறு ஓடியது. மனிதர்களை மனிதர்கள் 35 வருடங்களாகக் கொன்றனர். இனவாதம், இனத் துவேசம், இனக கலவரம் மூலம் நாட்டை கைப்பற்றுகின்ற பாரிய வியூகம் முன்னெடுக் கப்பட்டது.

சில முஸ்லிம்களையும், முஸ்லிம் ஆலிம் கள் என்கிற பெயரில் சிலரையும் குண்டுதாரி களாக பாவித்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் களை நடத்தினார்கள். கிறிஸ்தவர்களையும், முஸ்லிம்களையும் பிரியச் செய்தனர். இவை திட்டமிட்டு நடத்தப்பட்டவை என்று மக்களே தெட்ட தெளிவாக இன்று பேசி கொள்வதை செவிமடுக்க முடிகிறது.

அவ்விதம் கிறிஸ்த வர்களையும், முஸ்லிம்களையும் பிரித்த அதே சக்திகள்தான் இன்று இந்துக்களையும், முஸ்லிம்களையும் பிரிக்க பகீரத முயற்சிகள் மேற்கொள்கின்றன. அதன் ஓர் அம்சமே திருகோணமலையில் நடந்தேறுகின்றது. இந்துக்களையும், முஸ்லிம்களையும் மூட்டி விடல் பார்க்கின்றனர்.

எதிர்கால செல்வங்களான பாடசாலை பிள்ளைகளின் மனங்களில் இப்போதே இனவாதம் விதைக்கப்படுகின்றது. ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டும். ஓர் இனத்தவரின் உடை, உணவு, கலாசாரம், சமயம் சார்ந்த சுதந்திரங்களை மற்றைய இனத்தவர்கள் மதிக்க வேண்டும். எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம் என்று வாழ வேண்டும். - என்றார் அவர்.



# கந்தளாய் கிதுலுத்துவ பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி காட்டு யானை சாவு

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய், கிதுலுத்துவ பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி காட்டு யானையொன்று இன்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த காட்டு யானையின் வயது 15 முதல் 20 வயதாக இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கால்நடை வைத்தியரின் பங்களிப்புடன் யானையின் பிரேத பரிசோதனைமேற்கொள்ளப்படும் எனவுவனஜீவராசி அதிகாரி தெரிவித்தார்.

கிதுலுத்துவ பிரதேசத்தில் யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானைகள் - மனிதர் மோதல் பிரச்சினைகளைக் குறைப்பதற்கும், காட்டு யானைகள் அதிகம் காணப்படும் கந்தளச்ய், கிதுலுத் துவ பிரதேசத்தை உள்ளடக்கிய கிராமத்தை பாதுகாப்பதற்காக யானை வேலி அமைப்பதற்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

காட்டு யானை இறந்துள்ள பகுதியில் வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதும் குறிப்பித்தக்கது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தங்கவேலாயுதபுரத்தில் உழுந்து அறுவடை விழா

கிழக்கு மாகாண விவசாயத் திணைக்கத்தின் தங்கவேலாயுதபுரம் விவசாய நிலையத்திற்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரம் கிராமங்களில் உழுந்து பயிர்ச் செய்கை சிறப்பான முறையில் செய்கை பண்ணப்பட்டுள்ளது. இதற்கான விதையை கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களம் மானிய விலையில் வழங்கியிருந்தது. இவ்வாறு செய்கை பண்ணப்பட்ட உழுந்து அறுவடை வயல் விழா



விவசாயப் போதனாசிரியர் எஸ்.சித்திரன் தலைமையில் நடைபெற்றது.இதன் போது லகுகல வலயத்தின் உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். பரமேஸ்வரன், பாட விதான உத்தியோகத்தர் என்.எம்.ஆர் றஹீல் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்து தெரிவித்த விவசாயப் போதனாசிரியர் எஸ்.சித்திரன் கொரோனா காலத்தில் உணவு உற்பத்தியினை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு மறுவயற் பயிர் விதைகள் வழங்கப்பட்டு வெற்றிகரமாக பயிர்ச் செய்கை மேற் கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.மேலும் இங்கு கருத்து தெரிவித்த உதவி விவசாயப் பணிப்பாளர்; கிழக்கு மாகாண விவசாயத் திணைக்கத்தின் வழிகாட்டலின்கீழ் விவசாயிகளுக்கு மறுவயற் பயிர செய்கையின் மூலம் அதிக இலாபத்தினைப் பெறக்கூடியதாக உள்ளதாக தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கிண்ணியாவில் சிறுவர் பூங்காவுக்குள் கடைத் தொகுதி அமைப்பதற்கு எதிர்ப்பு







திருகோணமலை, கிண்ணியா பிரதேசசபையின் பராமரிப்பின் கீழ் உள்ள சிறுவர் பூங்கா அமைந்துள்ள காணியில் கடைக்கான கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு வருகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் கொழும்பு - கிண்ணியா பிரதான வீதியின் கச்சக்கொடித்தீவு பிரதேசசபைக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தை ஐந்து சங்கங்களும், பொதுமக்களுடன் இணைந்து நடத்தியுள்ளன.

இந்தச்சிறுவர் பூங்காவில் கிண்ணியா பிரதேசசபைக்குட்பட்ட இருபது கிராமங்களை சேர்ந்த சிறுவர்கள் இங்கே தமது பொழுது போக்கைக் கழித்து வருகின்றனர் எனவும், சிறுவர் செயற்பாட்டுக்கு வேறு ஓர் இடம் இல்லாததால் இக்கட்டட வேலையை நிறுத்துமாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்ட இடத்துக்கு வந்த திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், ஆர்ப்பாட்டக்காரர்களின் கருத்தினை கேட்டறிந்தமையோடு அவர்களது மகஜரையும் ஏற்றுக் கொண்டார்.

இதன் பின்னர் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் இது தொடர்பில் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பார் எனவும் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் ஏ.எஸ்.எம்.நசீர் கூறுகையில் -

இந்த வஙிடத்தில் சிறுவர் பூங்கா இருந்த போதிலும் கடந்த காலங்களில் முன்னாள் தவிசாளர்கள் ஒரு பூ மரச் செடியேனும் நாட்டுவதற்கு முயற்சி செய்யவில்லை. இந்த இடத்தில் சிறுவர் பூங்காவை அமைப்பதற்கு நாங்கள் பல முயற்சிகளை மேற்கொண்டோம்.

இந்த நிலையில் முன்னால் தவிசாளரும், குறிப்பிட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தக் கைங்கரியங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சிறுவர் பூங்காவை அமைப்பதோடு கிண்ணியா பிரதேசசபைக்கு வருமானம் ஈட்டித் தரக்கூடிய கடைத் தொகுதியை அமைப்பதற்கு முயற்சியை மேற்கொண்டு வருகிறேன். -எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சிறுவர் பூங்காவிற்கான அதே இடத்தில் பின் பக்கம் மிக சிறப்பான முறையில் அமையக்கூடிய வகையில் சிறுவர் பூங்காவை அமைப்பதாகத் தெரிவித்ததோடு, சபைக்கு வருகின்ற வருமானத்தைத் தடுக்கும் நோக்கில் இவர்கள் செயற்பட்டு வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அரசாங்கத்தினால் 90 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் நெல்!

அம்பாறை மாவட்டத்தில் பெரும் போகத்தின் அரச நெல் கொள்வனவு வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு கிலோ நாட்டரிசி நெல் 90 ரூபாவிற்கும், ஒரு கிலோ சம்பா நெல்லை 92 ரூபாவிற்கும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அரசாங்கம் அறிவித்த 75 ரூபா உத்தரவாத விலையை விட அதிக விலையில் நெல் சந்தைப்படுத்தல் சபையால் இவ்வாறு நெல் கொள்வனவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் 2021-2022 பெரும் போக நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை கண்காணிப்பதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் நீல் டி அல்விஸ் மற்றும் அம்பாறை மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் ஆகியோர் சம்மாந்துறை நெல் சந்தைப்படுத்தல் சபை களஞ்சிய வளாகத்திற்கு விஜயம் செய்தனர்.

அதன்படி தரமான ஒரு கிலோ கீரி சம்பா நெல் ரூ.95 ரூபாவுக்கும், சம்பா நெல் ஒரு கிலோ ரூ.92 ரூபாவுக்கும், நாட்டரிசி நெல் ஒரு கிலோ ரூ.90க்கும் கொள்முதல் செய்யப்பட்டன.

இதன்படி, அரசால் அறிவிக்கப்பட்ட 75 ரூபா உத்தரவாத விலையை விட அதிகமான நெல் கொள்வனவுகளை நெல் சந்தைப்படுத்தல் சபை ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறி விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

இதற்கிடையில், கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன, நேற்று முதல் ச.தொ.ச ஊடாக 998 ரூபா பெறுமதியான நிவாரணப் பொதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

துறைமுகத்தில் 500க்கும் மேற்பட்ட அரிசி கொள்கலன்கள் சிக்கியுள்ளன. அடுத்த வாரத்தில் இருந்து இது போன்ற அத்தியாவசிய கொள்கலன்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

## கோடரியால் தாக்கப்பட்டார் போக்குவரத்து பொலிஸார்



போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று (சனிக்கிழமை) காலை கோடரி தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளார்.

அதிகாரியின் தலைப் பகுதிக்கு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் கழுத்துப் பகுதிக்குவிழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பலாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு காயமடைந்துள்ளார். அவர் அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அம்பலாந்தோட்டை நகரின் மையப் பகுதியில் உள்ள மணிக்கூண்டுக் கோபுரத்திற்கு முன்பாக நேற்று காலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர் பொலிஸ் அதிகாரியைக் கோடரியால் தாக்கிய பின்னர் விம் அருந்தியுள்ளார்.

இதனையடுத்து சந்தேகநபரும் அம்பலாந்தோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பின்னர் சந்தேக நபர் மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி குடிபோதையில் வாகனம் செலுத்தியமைக்காக இந்த நபருக்கு அம்பலாந்தோட்டை பொலிஸாரால் அபராதம் விதிக்கப்பட்டுள்ள நிலையில், அதனால் கோபமுற்ற சந்தேக நபர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார் என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும், அபராதம் விதித்த அதிகாரிளை விடுத்து வேறொரு பொலிஸ் உத்தியோகத்தரையே சந்தேகநபர் தாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தந்தையை அடித்துக் கொன்ற மகன்!

இராகலை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட டெல்மார் தோட்டத்தில் மகனின் தாக்குதலுக்கு இலக்காகி தந்தை உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

உயிரிழந்த தந்தையின் சடலத்தை இராகலை பொலிஸார் நேற்று (சனிக்கிழமை) காலை மீட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர் 62 வயதான ஒரு பிள்ளையின் தந்தையான சுப்பிரமணியம் செல்வநாயகம் எனவும் இராகலை டெல்மார் மேல் பிரிவைச் சேர்ந்தவர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

தந்தைக்கும் மகனுக்கும் வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதால் மகன் தந்தையை இரும்பு ஒன்றினால் தாக்கியுள்ளார். தாக்குதலுக்கு இலக்கான தந்தை யின் தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டதையடுத்து அதிக இரத்த போக்கு காரணமாக வீட்டிலேயே உயிரிழந்துள்ளார் என ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த நீதிவானின் விசாரணைக்கு பின் சடலத்தை சட்ட வைத்தியர் ஊடாக பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நுவரெலியா மாவட்ட வைத்திய சாலையில் சேர்ப்பித்தார்.

சம்பவம் தொடர்பில் உயிரிழந்தவரின் மகனை கைது செய்துள்ள இராகலை பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

மேலும் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற வீட்டில் அடிக்கடி சண்டைகள் ஏற்பட்டுள்ள நிலையில் இராகலை பொலிஸ் நிலையத்தில் பல முறைப்பாடுகள் பதியப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## காணித் தகராறினால் கத்திக் குத்துக் கொலை

பனாமுர ஓமல்பே பகுதியில் நபர் ஒருவர் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

காணி தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஓமல்பே பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், மேலதிக விசாரணை களை பனாமுர பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

## சகல பாடசாலைகளுக்கு நாளை முதல் விடுமுறை!

அனைத்து அரச மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கான விடுமுறை நாளை (திங்கட்கிழமை) முதல் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் மார்ச் 7ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என அந்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை நாளை ஆரம்பமாகி மார்ச் 05 ஆம் திகதி நிறைவடைகிறது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.02.2022இல் வெளியிடப்பெற்றது.